CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ அஷ்டமிப்ரதக்ஷிண மாஹாத்மியம்

(க்ரந்தம் - தேவநாகரி - தமிழ் - தமிழுரையுடன்)

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவ புண்ணியத்தில் பங்கு கொண்ட சிவச்செல்வர்கள்

உரிமை : I.சுந்தரம் MBA

தரம் நிரந்தம்

SJS

சுந்தரம் ஜுவெல்லர்ஸ்

28.இராஜாஜி 1வது தெரு. திருமங்கலம் - 625 706.

04549 281917 +91 94867 80952



Mobile : 98432 62079

SHANTHA STORE

சாந்தா ஸ்டோர்

230,கீழமாசி வீதி, மதுரை - 625 001.

Email id : santhastores@gmail.com

Sm. JAY UTHAAMAN
Director - Strategy Planning
Mobile : 95 66 786 017

ARUPADAI

Eternal Trust Deserving

ARUPADAI BANKKERS
RS # 12, G-House Enclave,
III Floor, 70 Feet Road,
Opp. TNSTC Depot,
New Ellis Nagar,
Madurai - 625 01.
Tel : 0452 - 4518059
arupadaibankkersadmn@gmail.com

J M Vishnu Vardhan

Plot no : 13, Flat no : 201, 2nd floor,
Bharathi Nagar, 2nd Street,
Krishnapuram Colony, Madurai 625 014

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

உ

திருச்சிற்றம்பலம்

।। श्री अष्टमीप्रदक्षिणमाहात्म्यप्रारम्भः ।।

ஶ்ரீ அஷ்டமீ ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்.

(க்ரந்தம் + தேவநாகரி + தமிழ் + தமிழுரையுடன்)

தொகுப்பாசிரியர் :
சிவஶ்ரீ. க. கார்த்திகேய ஶிவம் அவர்கள்
ஸ்கந்தகுரு வித்யாலயம்.
திருப்பரங்குன்றம்.

மீள் பதிப்பும் - வெளியீடும்

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
மதுரை

சுபகிருது - மார்கழி - 2022

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் விபரங்கள்

நூல் பெயர் : அஷ்டமீப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்
(க்ரந்தம் + தேவநாகரி + தமிழ் + தமிழுரையுடன்)

தொகுப்பாசிரியர் : சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம் அவர்கள்

முதல் பதிப்பு : சுபகிருது-ஹூ மார்கழி-மீ-1, கிருஷ்ணபட்ச அஷ்டமி (16-12-2022) வெள்ளிக்கிழமை

நூலின் அளவு : 1/8 டெம்மி பக்கங்கள் : 26+54=80

படிகள் : 1000

© வெளியீடும் கிடைக்குமிடங்களும் :
சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
மூவேந்தர் நகர் 2-வது வீதி,
விஸ்வநாதபுரம், மதுரை - 625 014.
செல்லிடப்பேசி : 98423-35085,
99521-58359, 98431-31353.

கோ.சி.ஆடலரசு
ஒருங்கிணைப்பாளர்-அறுபத்துமூவர் மாத இதழ்
7/120, மெயின்ரோடு, (SBI ATM எதிரில்)
கொட்டாரம்-629 703. கன்னியாகுமரி (மா)
செல்லிடப்பேசி : 89037-33537

நூல் அமைப்பும், பதிப்பும் : ஸ்ரீகணநாத நாயனார் நூலகம்,
39/22, கிருஷ்ணாபுரம், முதல்தெரு,
திருச்சிராப்பள்ளி-620 008.
செல்லிடப்பேசி : 99528-06121.
Email : gnanam.tcy@gmail.com

பொருளடக்கம்

		பக்கம்
1.	அறக்கட்டளையின் அறிமுகமும் - பணிகளும்	iii
2.	பதிப்பாளரின் நன்றியுரை	vii
3.	முன்னுரை	viii
4.	அஷ்டமீப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்	1-54

அச்சாக்கம் : ஆர்.ஜி. பிரிண்டர்ஸ், 30, சின்னக்கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417, 98949-08437.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

சிவமயம்

இறைவனால் அருளப்பட்ட

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை

மூவேந்தர் நகர் 2–ஆவது வீதி, விஸ்வநாதபுரம், மதுரை–14.

e-mail id : gnanathaanam@gmail.com

அறிமுகமும் - பணிகளும்

R. செந்தில்குமார்-நிறுவனர்-தலைவர், 98423 35085

S. ஆனந்த்,மேலாண்மை அறங்காவலர், 98431 31353

அறங்காவலர்கள்:

S. இராஜமாணிக்கம், R. குணசுந்தரி, A. மலர்மதி,

T.R. இராமதாஸ், G. நெடுஞ்செழியன்

கௌரவ ஆலோசகர்கள்:

சிவ. பொன்.முத்துவிநாயகம் ஓதுவார், S. கற்குவேல்,

சிவ. சு.அனந்தசுப்பு, B. கார்த்திக்ராமர், TRS. ரமேஷ்கண்ணன்,

J. சிவலிங்கம், M.சுகுமார், திருமதி. பிரபாவதி சுகுமார்,

கைலைமணி சசிகலா, ‘அகோர சிவகணன்’ மு.ஜெயக்குமார்

சைவசமயம் சம்பந்தமான பழைய நூல்களையும் வேத சிவாகமத்தின் ஞானபாத நூல்களையும் மறுபதிப்புச் செய்து ஞானதானமாக வழங்குதல்.

இதுவரை எமது வெளியீடுகள்:

1. சிவகீதை
2. சிவரகசியம்-முதலாம் அம்சம்-மகேசம்
3. சிவரகசியம்-இரண்டாம் அம்சம்-பவம்
4. சிவரகசியம்-மூன்றாம் அம்சம்-பூர்வபாகம்-ஹாரம்
5. பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம்
   (கிரந்தம், நாகரம், தமிழ் எழுத்துக்கள்+தமிழ்உரையுடன்)
6. இரத்தினகிரி (எ) திருவாட்போக்கிப் புராண வசனச் சுருக்கம்
7. ஸ்ரீருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் (தேவநாகரி-தமிழ்-தமிழுரையும்)
8. வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோல் ஆதீனம் (ஆதீனவரலாறு)
9. வேதசார விளக்கம்.
10. சிவபராக்கிரம போற்றித் திருஅகவல்
11. ஸ்ரீசிவநாம அஷ்டோத்திர சதநாமாவளி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்

இறைவனால் அருளப்பட்ட
சித்தம் சிவமயம் பொதுநல அபிவிருத்தி
அறக்கட்டளை

7,8 அகஸ்தியர் வீதி, விஸ்வநாதபுரம், மதுரை-14.
e-mail id : gnanathaanam@gmail.com

அறிமுகமும் - பணிகளும்

சிவாலயங்களுக்கு அபிஷேகப் பூஜைப்பொருட்கள் கொடுத்தல், பசு விபூதி, உருத்திராக்க மணி கொடுத்தல், வில்வக் கன்றுகள் கொடுத்தல், தலவிருட்சங்கள் வைக்க உதவுதல், விபூதி வைக்கும் வில்வஓடு கொடுத்தல், மாதந்தோறும் திருவாதிரை நட்சத்திரத்தில் நடராஜருக்கு புஷ்பாஞ்சலி, வருடந்தோறும் சித்திரைப் பெருந் திருவிழாவில் நீர்மோர், பானகம், கைவிசிறி பக்தர்களுக்கு தந்துதவுதல், புரட்டாசி மஹாலய அமாவாசை அன்று முன்னோர் களுக்கு பிதிர்த்தர்ப்பணம், மார்கழி மாத அஷ்டமீ ப்ரதக்ஷிணத்தன்று கத்தரிக்காய் சாதம் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குதல்.

R. **செந்தில்குமார்** - நிறுவனர் - தலைவர், **98423 35085**

திருமதி. **செல்வி செந்தில்குமார்**, மேலாண்மை அறங்காவலர்

கௌரவ ஆலோசகர்கள் :

பாலமுருகன் - திருமதி. பாலமுருகன்,

K.நடராஜன், M.மகேஷ்குமார்

அன்னதான வஸ்திரதான அறக்கட்டளை

V.**வெங்கட்ராமன், 99521 58359** மேலாண்மை அறங்காவலர்

எங்களது வெளியீடுகளைப் பார்க்கவும், பெறவும் எமது முகநூல் பக்கமான (www.facebook.com / siththamsivamayam-பக்கத்தினை பார்வையிடலாம். சிவஞானதானத்தில் சிவபுண்ணியத்தில் அவசியம் தாங்கள் பங்குபெற வேண்டுகிறோம்.

விரும்புவோர் கீழ்க்கண்ட கணக்கில் பணம் அனுப்பலாம்.

பெயர்	:	சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
Bank	:	Tamilnad Mercantile Bank Ltd.
Branch	:	Madurai Main
C/Ac. No.	:	002100019741975
IFSC Code	:	TMBL0000002

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

இறைவனால் அருளப்பட்ட **சித்தம் சிவமயம்** ஞானதான அறக்கட்டளை

"எல்லாம் உனதுபதம்! எல்லாம் உனது செயல்!
எல்லாம் உனதருளே என்றிருந்தால் – பொல்லாத
மாதுயரம் நீங்கும் மருவும் உனதடிக்கே
ஆதரவாய்ச் சொக்கநா தா..."

- சொக்கநாத வெண்பா 62

சொக்கநாதா!!! சோமசுந்தரக்கடவுளே!!! மதுரையம்பதி அரசே!!!
வெள்ளியம்பலக்கூத்தனே!!! ஆலவாய் அண்ணலே!!!
எல்லாம் வல்ல சித்தனே!!!

ஓம் நமசிவாய நம: ஓம் நமசிவாய நம: ஓம் நமசிவாய நம:

முன்னுரை.

அருள்மிகு சுந்தரேஸ்வரர் உடனமர் அருள்தரு மீனாட்சியம்மை முன்னிலையில் அதிசயக்கூத்தன் கூத்தாடும் வெள்ளியம்பல சபையில் கூடியிருக்கும் சிவச்செல்வர்கள் அனைவரையும் பணிந்து வணங்குகிறேன்.

குரு வடிவில் இறைவன்

"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு கல்லுண்டு மரமும்உண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதிஉண்டு அனேககுல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரு மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமையென வகுத்தார் முன்னோர்"

- சிவானந்தபோதம் 6-ஆம் பாடல்

வானவருள் மனிதராய் வந்துதித்த சாநித்தியகுரு, 'எம்மை எதுவாகக் கருதி வழிபடுகிறீர்களோ யாம்அதுவாகவே இருந்து அனைத்து நன்மைகளையும் வழங்குகிறோம். (அப்படியே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆகட்டும்)' என்ற ரிபுகீதையின் வாக்கியத்திற்கு நிலைப்பாடாக வாழ்ந்தவர் சாநித்தியகுரு 'கார்வார்' 'பூஜ்யஸ்ரீ' புஷ்பவிநாயகம் ஆண்டவர் அடியேனது முதல்குரு ஆவார். சிந்தையில் சிவஞானத்தை ஊற்றி வளர்த்த அவரது உபதேசங்களில் சிவகீதை, குருகீதை, ரிபுகீதை, திருமூலரின் திருமந்திரம் ஆகியன முக்கிய இடம் வகித்தன. தீட்சைகள் பல அளித்து செயல்முறை பயிற்சியாக ஆத்மார்த்தபூஜைக்கு பயிற்சி அளித்த அவரே அடியேனை குகானந்த குருபீடத்தின் ஞானதான அறக்கட்டளைகளுக்கு ஸ்ரீகுருவாக பயிற்சி கொடுத்தவர்.

ஆகஸ்டு 15, 2007-ல் விருதுநகரில் நடைபெற்ற மகா மகேசுவர பூஜையில்தான் கார்வார் பூஜ்யஸ்ரீ புஷ்பவிநாயக ஆண்டவர் அவர்களை இரா.செந்தில்குமார் ஆகிய அடியேன் சந்தித்தேன். அவர்களின் அவதாரத் திருநாள் ஆகஸ்டு 15 ஆகும். அவர் காலத்துக்குப்பின் சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை இறைவனால் அருளப்பட்ட நேரத்தில் எங்களின் நோக்கத்தினை அறிந்து எங்களை அழைத்து ஆசியளித்த செங்கோல் ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களை அடியேன் சந்தித்தது ஆகஸ்டு 15, 2017 அன்று. அவர்களின் அவதாரத் திருநாளும் ஆகஸ்டு 15!!!

வழிவழியாய் குருமரபு எங்களை ஆட்கொண்ட விதம் இறைவன் அருளியதே!!! அடியேனது வாழ்வில் ஆன்மீக அருள் அனுபவங்களை ஏற்படுத்திய அனைத்து குருமார்களுக்கும் அடியேனது வணக்கங்கள்.

அறக்கட்டளையின் முதல் வெளியீடு
சிவகீதை (11-02-2018)

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளையின் முதல் வெளியீடான சிவகீதையானது 18 புராணங்களில் ஒன்றான பத்மபுராணத்தில் உத்திரபாகத்தில் 4-ஆவது பாதாள கண்டத்தில் 23-ஆம் சூசியில் '**சிவகீதை**' என்னும் உபநிடதமாக உள்ளது. ★தண்டகாரண்யத்தில் சீதையைஇழந்து இராமர் துயருற்றபோது அகத்தியமுனிவர் (சிவதீட்சை) விரஜாதீட்சை அளித்து சிவவிரத மிருந்து சிவபூஜை செய்ய வழிகாட்டினார். அகத்தியரின் வழிகாட்டுதலின்படி சிவபூஜை செய்த இராமரின் சிவவிரதத்திலும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவபூஜையிலும் மகிழ்ந்த சிவபெருமான் அவர்முன் தோன்றி பாசுபத அஸ்திரத்தை வழங்கிச் செய்த உபதேசமே சிவகீதை ஆகும்.

இராமருக்கு கீதையை சிவபெருமான் உபதேசிப்பதை கேட்டுக் கொண்டிருந்த முருகப்பெருமான் அதை ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். ஸனத்குமாரர் வேதவியாசருக்கும், வேதவியாசர் சூதமுனிவருக்கும், சூதமுனிவர் மற்ற முனிவர்களுக்கும் உபதேசித்தார்.

112 ஆண்டுகளுக்குப் பின் மறுவெளியீடாக இறைவனின் சித்தப்படி வெளியிடப்பட்ட இந்நூல் நமது அறக்கட்டளையின் நோக்கத்தின்படி ஆயிரம் புத்தகங்கள் சிவஞானதானமாக வெளியிட முடிவு செய்து 11-02-2018 அன்று பெருங்குளம் - செங்கோல் ஆதீனம் குருமஹாசந்நிதானம் அவர்களது பொற்கரங்களால் ஆன்றோர்கள் சான்றோர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

அறக்கட்டளையின் இரண்டாவது வெளியீட்டில் வெளியிடப்பட்ட நூல்கள் சிவரகசியம் (15-08-2018)

குருவடிவாய் வந்து எங்களை ஆட்கொண்ட இறைவனுக்கு அவதாரத் திருநாளாகிய ஆகஸ்டு 15, 2018 அன்று முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. அதில் (1) மஹா இதிகாசமாகிய சிவரஹஸ்யம் முதலாம் அம்சம் 'மஹேஸம்', (2) சிவகீதை இரண்டாம் பதிப்பு, (3) செங்கோல் ஆதீன வரலாறு ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

அறக்கட்டளையின் மூன்றாவது வெளியீட்டில் (28-03-2021) பங்குனிஉத்திரத்திரத்தன்று வெளியிடப்பட்ட நூல்கள்

1. இறைவனின் அருள்ஆணைப்படி மஹாஇதிகாசமாகிய சிவரஹஸ்யம்-இரண்டாம் அம்சம்-பவம் வெளியிடப் பட்டுள்ளது.
2. இறைவனின் அருள்ஆணைப்படி மஹாஇதிகாசமாகிய சிவரஹஸ்யம்-மூன்றாம்அம்சம்-ஹாரம் வெளியிடப் பட்டுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

3. பிருங்கிரிடி சம்ஹிதையில் உள்ள வில்வ அஷ்டோத்ர சத நாமாவளி கிரந்தம், நாகரம், தமிழ் உச்சரிப்பு, தமிழ் விளக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

4. **இரத்தினகிரி (எ) திருவாட்போக்கி புராண வசனச் சுருக்கம் :** கமலைமாநகர் வைத்தினாத தேசிகரால் இயற்றப்பட்ட மூலநூலிற்கு அலகரை – "வரகவி" அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய வசனச் சுருக்கமும் சில போற்றிப் பாடல்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

5. **ஸ்ரீருத்ர சஹஸ்ரநாம ஸ்தோத்ரம் - தேவநாகரி - தமிழ் - தமிழுரை:** சிதம்பரம், 'சது: சாஸ்த்ர சிரோமணி' பண்டிதராஜ' பிரம்மஸ்ரீ சோம. ஸேதுதீக்ஷிதர் அவர்கள் உரைஎழுதி, சென்னை 'சங்கரனடிமை' 'ஆங்கிரஸ' எஸ். வேங்கடேச சர்மா அவர்கள் பதிப்பித்த நூலினை சிறு திருத்தங்களோடு கூடியது வெளியிடப்பட்டுள்ளது.

6. **பூப்பிள்ளை அட்டவணை+சிவபராக்ரம போற்றி அகவல்** ஒரே நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

7. **வேதசார விளக்கம்.** (மருவூர் பிரம்மஸ்ரீ கணேச சாஸ்திரியார் அவர்கள் இயற்றியது)

<u>அறக்கட்டளையின் நான்காவது வெளியீட்டில் (31-07-2022) ஆடிப்பூரம் தினத்தன்று வெளியிடப் பட்டவை :</u>

1. **ஸ்ரீசிவநாம அஷ்டோத்திர சதநாமாவளி** (க்ரந்தம்-நாகரம்-தமிழ்-தமிழுரையுடன்)

2. **சிவகீதை** - மூன்றாம்பதிப்பு.

1. நமது அடுத்தடுத்த வெளியீடுகள் :

ஸ்ரீசிவகீதை அடுத்தடுத்து ஆயிரம் பதிப்புகளாக வெளிவந்து கொண்டேயிருக்கும். அதில் கருத்துக்களை தெளிவுபடுத்தத் தேவையான வண்ணப் படங்களுடனும், மூலம் - க்ரந்தம் + தேவநாகரி + தமிழ் எழுத்துக்களையும் அதற்கான தமிழ் உரையும் சேர்த்து வெளியிடப்படும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

2. **மஹாஇதிஹாஸமாகிய சிவரகசியம் (1-12):** ரிபுகீதை யினை வெளியிட்டு சாநித்யகுருவிற்கு நன்றி காணிக்கையை செலுத்த விரும்புகின்றோம். ரிபுகீதை என்பது கைலாயத்தில் பரமசிவனால் உமாதேவிக்கு சம்பாஷனையாக (உரைநடை யாக) உபதேசிக்கப்பட்ட பன்னிரண்டு அம்சங்கள் கொண்ட மஹாஇதிகாசமான சிவரகசியத்தில் ஆறாவது அம்சமாக உள்ளது. அந்த மஹா இதிகாசமாகிய சிவரகசியம் பன்னிரண்டு அம்சங்களையும் தனித்தனியாக (12) வெளியிட உள்ளோம். இதன் வடமொழி மூலஸ்லோகத்திற்கான தமிழ்உரை தமிழ் போற்றும் சைவசமய உலகிற்கு முழுமையாகக் கிடைக்க வில்லை. சிவனடியார்கள் அனைவரின் வேண்டுதலுக்கு இணங்க சிவபெருமானின் கருணையால் நிச்சயம் வழி கிடைக்கும்.

3. **சிவபராக்கிரமம் (1-64) :** ஸ்காந்த புராணத்திலுள்ள சிவபெருமானின் சிவபராக்கிரமம் என்னும் 64 வடிவங்கள் பற்றி விரிவான தத்துவ விளக்கத்துடனும், பல வண்ணப் படங்களுடனும் வரலாறுகளுடனும் தனித்தனி (64) நூல்களாக வெளியிடுதல்.

4. வளம்பல நல்கும் மதுரை பஞ்சபூதத் ஸ்தலங்கள்.

5. **விரஜாதீட்சை :** பத்மபுராணத்திலுள்ள வேதசார சிவசஹஸ்ர நாமம், அகத்தியர் இராமருக்கு அருளிய விரஜாதீட்சை விளக்கத்துடன் வெளியிடப்படும்.

6. சைவபூஷணம் - க்ரந்தம் + நாகரம் + தமிழுரையுடன்.

7. மாகேஸ்வர சூத்திரம். ஸ்ரீநந்திகேசுவர காசிகை + தத்துவ விமர்சினி வியாக்கியானம் + சிவஸ்ரீ சபாரத்ன சிவாசாரியார் அவர்களின் விளக்கம் சேர்ந்தது + சிவாகமம்வல்ல சிவாசாரியப் பெருமக்களின் கட்டுரைகளுடன்)

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

8. க்ரந்தம் பாலபாடம் - கற்க, கற்பிக்க.

''யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே''

என்ற திருமூலரின் வரிகளுக்குஏற்ப இறைத்தன்மையைப் பற்றி பேசப்பேச எழுதஎழுத நினைக்கநினைக்க இறைவன் நம்மூலம் வெளிப்பட்டு நம்உயிர் இறைத்தன்மை பெற்று வருகிறது.

சிவஞானத்திற்கு தங்களின் பங்களிப்பை வேண்டுதல் :

வாரீர்! ஊர் கூடித் தேர் இழுப்போம் வாரீர்! சிவபுண்ணியஞ் செய்வீர்!!
சிவனருள் பெறுவோம் வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

ஆகவே இந்தச் சிவபுண்ணியங்களை வழிநடத்திட, பெரியோர்கள் தங்கள் நல்லாசிகளையும், நல்லாதரவையும் வழங்கிட வேண்டுகிறோம்.

இந்தச் சிவபுண்ணியங்களில் சிவஞானதானத்தில் பங்குபெற விருப்பமுள்ள அன்பர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இந்தச் சிவபுண்ணியங்களுக்கு, சிவஞானதானத்திற்குத் தேவையான பொருள்களை தாராளமாக தானமாகத் தரலாம். வரைபடக் கலைஞர்கள், DTP டிசைனர்கள், தங்கள் திறமையை தானமாகத் தரலாம்.

ஆன்மீகப் புத்தக வெளியீட்டாளர்கள் எங்களோடு இணைந்து செயல்படலாம். ஏற்போர் இணைந்து வாருங்கள், அதுவே இறைவனின் ஆசியைப்பெற எளிய வழியாம்.

அறக்கட்டளையினரின் அன்பு வேண்டுகோள்

11-2-2018 அன்று வெளியிடப்பட்ட சிவகீதை நூல் 1000 பிரதிகளும், 15-08-2018 அன்று வெளியிடப்பட்ட சிவரஹஸ்யம் - முதலம்சம் - மஹேசம் 1000 பிரதிகளும் அதே தேதியில் வெளியிடப்பட்ட சிவகீதை இரண்டாம் பதிப்பு 1000 பிரதிகளும் சிவஞானதானமாகவே வழங்கப்பட்டுவிட்டது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இனிவரும் காலங்களில் மேலும்பல அரியநூல்கள் (௪0) எண்பது தலைப்புகளில் தனித்தனியாக வெளியிடயிருக்கும் நமது நோக்கத்தினை நிறைவேற்றத் தேவையான நிதியினைத் திரட்ட அடுத்த வெளியீடுகளில் அறக்கட்டளைக்கு குறைந்தபட்ச நன்கொடையினை தானமாக அளித்து நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறக்கட்டளை நிர்வாகிகளினால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை இறைவனின் அருள்மழையில் நனைந்து நனைந்து அதிசயித்துக் கொண்டே இருக்கிறது. ''அதிசயங்களும் ஆற்றல்களும் இறைவனின் ஆசி வழியே'' என்ற குருவின் வாக்கு மெய்ப்படுகின்றது.

நன்றியுரை.

''அஷ்டமீ ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்'' நூலினை தொகுத்தும், புதியஉரை எழுதுவித்தும், க்ரந்தம்-தேவநாகரி லிபிகளில் டைப் செய்து அறக்கட்டளைக்கு தந்துதவிய மதுரை, திருப்பரங்குன்றம், ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், ஆகம அத்யாபகர் ''சிவாகம பாஸ்கர'' சிவஸ்ரீ க. கார்த்திகேயஶிவம் ஐயா அவர்களுக்கு மனம்மெய் மொழிகளாலான வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலினை பதிப்பித்துக் கொடுத்த நமது அறக்கட்டளை யின் நூல்கள் பதிப்பாளர் திருச்சிராப்பள்ளி, 'ஸ்ரீகணநாதநாயனார் நூலகம்' - போற்றுநர் - அகோரசிவகணன் மு.ஜயக்குமார் அவர்களுக்கும், இந்த அற்புதநூலை சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த ஆர்.ஜி.பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்.

பதிப்பாளரின் நன்றியுரை.

ஸ்ரீ கணநாத நாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி.

மெய்யன்புடையீர், வணக்கம். சிவநெறிச் செல்வர்களுக்கும், சிவநேயச் செல்வர்களுக்கும் சிவபுண்ணியச் செல்வர்களுக்கும் வணக்கங்கள். "ஸ்ரீஅஷ்டமீ ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம் (க்ரந்தம் + தேவநாகரி + தமிழ் + தமிழுரையுடன்)" என்கிற இவ்வற்புத நூலை வெளியிட வைத்த எல்லாம்வல்ல திருவருளுக்கும் குருவருளுக்கும் முதற்கண் அடியேனது மனம்மெய் மொழிகளாலான வணக்கங்களையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

இந்நூலை தொகுத்துக் கொடுத்த மதுரை திருப்பரங்குன்றம், ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், ஆகமஅத்யாபகர் சிவஸ்ரீ க. கார்த்திகேயஸிவம் ஐயா அவர்களுக்கு வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த அரியநூலினை பதிப்பித்துத் தருமாறு கேட்டுக் கொண்ட மதுரை, சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை நிறுவனர் - தலைவர் திரு. இரா.செந்தில்குமார், மேலாண்மை அறங்காவலர்கள் : திரு. S.ஆனந்த், திரு. V.வெங்கட்ராமன், திருமதி. செல்வி செந்தில்குமார் ஆகியோருக்கு எமது வாழ்த்துகள். நன்றிகள்.

இந்நூலினை பதிப்பிக்கும் சிவபுண்ணியச் செயலுக்கு பொருளுதவி வழங்கிய அனைத்து சிவபுண்ணியச் செல்வர்களுக்கும் எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரரின் திருவருளால் எல்லா நலங்களும் வளங்களும் கிடைத்திடவும், மேன்மேலும் சிவபுண்ணியங்களைச் செய்திடவும், இதுபோல இன்னும்பல அரியநூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிடவும், சிவபுண்ணியச் செயல்கள் இன்னும்பல செய்திடவும் அறக்கட்டளையினருக்கு துணைநிற்க வேண்டுமாய் எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த அற்புதநூலை சிறந்த முறையில் அச்சிட்டு கொடுத்த திருச்சிராப்பள்ளி, ஆர்.ஜி.பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

– அடியார்க்கடியேன்,

அகோர சிவகணன் **மு. ஜயக்குமார்**

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

ஸ்ரீகுருப்யோ நம:

'சிவாகம பாஸ்கர'
ஶிவசரணகமலைக ஶரண்யன்
சிவஸ்ரீ க. கார்த்திகேய ஶிவம்
ஸ்ரீஸ்கந்தகுரு வித்யாலயம், திருப்பரங்குன்றம்.

முன்னுரை.

''திருவாலவாய்க்கு இணையாம் ஒருதலமும்,
தெய்வமணஞ் செய்யப்பூத்த
மருவார் பொற்கமலநிகர் தீர்த்தமும்,
அத்தீர்த்தத்தின் மருங்கில் ஞான
உருவாகி உறை சோமசுந்தரன் போல்
இகபரந்தந்து உலவா வீடு
தருவானும் முப்புவனத்திலும் இல்லை
உண்மை இது சாற்றின் மன்னோ''.

-திருவிளையாடற்புராணம்

எல்லாம்வல்ல பரமேச்வரன் அங்கயற்கண்ணி உடனமர் ஆலவாயண்ணல் சொக்கநாதப் பெருமானின் திருவருளோடு சொக்கநாதப் பெருமானின் அருள்வரலாறு ஒன்றை விளக்கும் **'அஷ்டமீ ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்'** என்ற நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இந்நூல் ஸ்ரீஸ்காந்தபுராண ப்ரஹ்மஸம்ஹிதையில் குருகீதை என்ற பகுதியில் 34-ஆவது அத்யாயமாக அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

க்ஷேத்ரபாலபுர வித்வத்ரத்னம் **ஸ்ரீநீலகண்ட ஸாஸ்திரிகள்** இயற்றிய சிறிய குறிப்புரையோடு இந்நூலை ஸ்ரீஜய வருஷம் ஐப்பசி மாதம் 1894-ஆம் ஆண்டு, திருவையாறு ப்ரஹ்மஸ்ரீ **பஞ்சாபகேசஐயர்** அவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

சுமார் 121 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போது இந்நூல் இரண்டாவது முறையாக வெளியிடப்படுகிறது. இதன் மூலநூல் மானாமதுரை, **ஸாம்பவஸ்ரீ சு.தெய்வசிகாமணி பட்டர்** அவர்களுடையதாகும். அதை நமக்கு வழங்கியவர் அவருடைய பௌத்ரன் **சிவஸ்ரீ ந.தெய்வசிகாமணி பட்டர்** அவர்கள். அவருக்கு நமது நன்றிகளையும் நமஸ்காரங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்நூலை மதுரை ஆதீனத்து அறிஞர் உயர்திரு. இராமசுவாமிப்பிள்ளை அவர்கள் மொழிபெயர்த்துள்ளார்கள். அம்மொழிபெயர்ப்பு 1954-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாவது பதிப்பாக அம்மொழி பெயர்ப்பை மதுரை அன்பர்கள் என்ற அமைப்பினர் 1996-ஆம் ஆண்டு வெளியிட்டுள் ளார்கள்.

அவை இரண்டுமே மூலநூலின்றி மொழிபெயர்ப்பு மட்டுமே. இப்பதிப்பில் மூலநூல் தேவநாகரீ, க்ரந்தம் ஆகிய இரண்டு எழுத்துக்களிலும், புதிதாகச் செய்யப்பட்ட தமிழ்மொழி பெயர்ப்போடும் வெளியிடப்படுகிறது.

ஆலவாயின் பெருமை.

கர்மபூமி-ஞானபூமி என்றெல்லாம் போற்றப்படுகின்ற நம் பாரதமணித் திருநாட்டில் நிலவுகின்ற ஆலயங்கள் எண்ணிலடங்கா. அவற்றுள் பலதலங்கள் பலவகைச் சிறப்புக்களோடு விளங்கு கின்றன. அவற்றை மூர்த்தி, தலம், தீர்த்தம் என வகைப்படுத்துவர் பெரியோர்.

அந்த மூன்றுவகைச் சிறப்புகளையும் கொண்டு விளங்குகின்ற ஆலயங்களும் பல உள, அவற்றுள் நாயகமாக விளங்குவது ஆலவாய் எனும் மதுரை எனில் அது மிகையாகாது.

தலம், தீர்த்தம், மூர்த்தி என்ற வரிசையில் அதன் சிறப்புகள் ஸ்ரீஹாலாஸ்ய மாஹாத்ம்யம் என்ற நூலில் க்ஷேத்ர-தீர்த்த ஈசவைபவம் என்ற தலைப்பிலும், ஸுந்தரேசஸ்ய லீலா என்ற தலைப்பிலும் அழகாக விளக்கப்பட்டுள்ளது.

'கேட்பதால் அனைத்துப் பாபங்களையும் போக்கவல்லதான ஒருதலத்தைச் சொல்லவேண்டும் என்று அம்பிகை சிவபெருமானைக் கேட்க, சிவபெருமான் அம்பிகைக்குச் சொல்லும்போது, அம்பிகையின் மடியிலமர்ந்து கேட்ட முருகப்பெருமான் எனக்காக அதைச் சொன்னார்' என்று தொடங்கி மூர்த்தி-தலம்-தீர்த்தம் ஆகியவற்றின் பெருமைகளை விளக்குகிறார் அகஸ்த்ய மாமுனி, அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

க்ஷேத்ரம் ஹாலாஸ்ய ஸத்ருஶம் தீர்த்தம் ஹேமாப்ஜினீ ஸமம்।
லிங்கம் ஸ்ரீஸுந்தரேஶேன துல்யம் நாஸ்தி ஜகத்-த்ரயே।।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆலவாய்க்கு இணையான தலமும், பொற்றாமரைக்கு இணையான தீர்த்தமும், ஸ்ரீ ஸுந்தரேஶ்வரப்பெருமானுக்கு இணையான தெய்வமும் மூவுலகிலும் இல்லை என்பது அவர் வாக்கு.

தலப்பெருமை.

ப்ரஹ்மணோ த்வாதஶாந்தத்வாத் பூலோக ஶிவலோகத:।
ஶம்போஸ்து லீலாஸ்தாநத்வாத் க்ஷேத்ரமேதத் பராபரம்।।
யதா ந ஸந்தி க்ஷேத்ராணி புண்யானி புவனேஷு ச।
ஸ்ரீஹாலாஸ்யம் ஶிவேநைவ விஹர்தும் நிர்மிதம் புரா।।
தஸ்மாத் தத்க்ஷேத்ர மாஹாத்ம்யம் ஜாநாத்யேவ மஹேஶ்வர:।।

விராட்புருஷனுடைய த்வாதசாந்தஸ்தானமாக இது விளங்குவதாலும், தனது திருவிளையாடல்களை நடத்துவதற்காக சிவபெருமான் தானே தேர்ந்தெடுத்த காரணத்தாலும், உலகில் தலங்களெல்லாம் உண்டாவதற்கு முன்னர், தான் வசிப்பதற்காகவே சிவபெருமானால் உண்டாக்கப்பட்டதாலும் இந்தத் தலத்தின் பெருமையை சிவபெருமான் மட்டுமே அறிவார் என்று குறிப்பிடுகிறார் அகஸ்த்ய மாமுனி.

த்ரவ்யஜாதம் லயம் யாதி யதா லோஹேக்னிதீபிதே।
ததா ஸர்வாணி பாபானி லயம் தத்ரைவ யாந்தி ச।।

இரும்பை நெருப்பில் காய்ச்சுகின்றபோது அது எப்படி இரும்புத்தன்மை நீங்கி நெருப்புத்தன்மையை அடைகிறதோ, அது போல ஆலவாய் தலத்துக்கு வருகிறவர்களுடைய வினைகளெல்லாம் உடனே எரிந்துவிடுகின்றன என்கிறார்.

பிபீலிகாதி ஹஸ்த்யந்தம் தத்ர முக்திம் ப்ரயாதி ச।

இத்தலத்தில் எறும்பு முதல் யானை ஈறான அனைத்து உயிரினங்களும் மோக்ஷம் அடைந்திருக்கின்றன.

சிதம்பரே மஹாக்ஷேத்ரே நிருத்தமேகந்து த்ருஶ்யதே।
ராஜதே து ஸபாமத்யே வ்யத்யஸ்தமதிகம் பரம்।।

மஹாக்ஷேத்ரமாகிய சிதம்பரத்தில் சிவபெருமான் ஒரே வகை நடனத்தில் தான் காட்சி தருகிறார். ஆனால் வெள்ளியம்பலத்திலோ கால்மாறி ஆடியும் காட்சி தருகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

எல்லாத் தலங்களிலும் தர்சனம் செய்த புண்ணியம், யாகங்கள் எல்லாவற்றையும் செய்த புண்ணியம், எல்லா புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய புண்ணியம், வ்ரதங்கள் அனைத்தையும் கடைபிடித்த புண்ணியம் இந்தத் தலத்தில் வசிப்பதால் ஏற்படுகிறது.

ஸந்தி ஸ்தானான்யனேகானி ஶிஷ்டானி புவனேஷு ச।
ஸ்ரீஹாலாஸ்யஸமம் க்ஷேத்ரம் ருத்ரசிந்நைவ த்ருஶ்யதே॥

பெருமைகள் நிறைந்த தலங்கள் உலகில் பல இருக்கின்றன. ஆனால் ஆலவாய்க்கு இணையான தலம் எங்கும் இல்லை.

இத்தலம் சிவத்தலங்களில் மேலானதால் சிவக்ஷேத்ர உத்தமம், இத்தலத்தின் எல்லையைப் பாம்பு காட்டியதால் ஸ்ரீஹாலாஸ்யம், எல்லா ஞானங்களையும் அருள்வதால் ஸமஷ்டி வித்யா நகரம், சிவபெருமானின் ஜடாமுடியிலிருக்கின்ற சந்த்ரனிடத்திருந்த அம்ருதம் பொழிந்து நனைந்ததால் மதுராபுரம், பெருமானின் திருமணத்திற்கு சிவகணங்கள் யாவும் வந்து நின்றதால் பூலோகசிவலோகம், இங்கு வாழ்பவர்கள் அனைவருக்கும் மோக்ஷமளிப்பதால் ஜீவன்முக்திபுரம், நான்கு மேகங்கள் கூடங்களாகக் கூடியதால் சதுஷ்கூடபுரம், உலக மூர்த்திக்கு த்வாதசாந்த ஸ்தானமாக விளங்குதால் த்வாதசாந்தம் என்ற பல பெயர்களைக் கொண்டு விளங்குகிறது.

பரஞ்சோதி முனிவரும் தலத்துப் பெயர்களை வரிசைப் படுத்தும்போது இன்னும் சில பெயர்களைக் கூட்டி,

அத்திருமாநகரின் பேர் சிவநகரம் கடம்பவனம் அமர்ந்தோர்
சீவன்முக்திபுரம் கன்னிபுரம் திருஆலவாய் மதுரை முடியாஞானம்
புத்திதரும் பூவுலகில் சிவலோகம் சமட்டிவிச்சா புரம் தென்கூடல்
பத்திதரு துவாதசாந்தத் தலமென்று ஏதுவினால் பகர்வர் நல்லோர்.

என்று குறிப்பிடுகிறார். சிவபெருமானே பாண்டியனாகி ஆட்சி செய்ததால் சிவநகரம், கடம்பமரங்கள் நிறைந்ததால் கடம்பவனம், அன்னை கன்னியாக ஆட்சி செய்ததால் கன்னிபுரம் போன்ற பெயர்கள் இத்தலத்துக்கு விளங்குகின்றன.

அநந்தமஹிமா தஸ்ய ஹாலாஸ்யஸ்ய த்விஜோத்தமா:।
கஸ்தம் வர்ணயிதும் சக்த:ஶிவக்ஷேத்ரோத்தமஸ்ய ச॥

எண்ணிலடங்காத பெருமைகளைக் கொண்ட ஆலவாயின் மஹிமையை யாரால் வர்ணிக்கமுடியும் என்று இத்தலத்தின் பெருமையை விவரிக்கிறார் அகஸ்தியர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தீர்த்தத்தின் பெருமை.

கணைரேவம் ப்ரார்த்திதஸ்ஸன் ஜீவந்முக்திபுரேஶ்வர:।
சகாந சத்ரிஶூலேந லிங்கஸ்யாக்னேயதேஶத:॥
பிநத்தி ஶூலமூலந்து ப்ரஹ்மாண்டாத:கடாஹகம்।
ப்ரஹ்மாண்டானாம் ததாதாராத் நிர்மலஶ்சாதிபாவனா:॥
ஆபஸ்ஸமுத்கதா: தத்ர சடாதே ஶூல காகிகே।
புனருச்சை: உத்கதாஶ்ச ப்ரவாஹாஶ்ச ஜலஸ்ய ச॥
ஸ்தம்பிதா தேவதேவேந த்ரைலோக்யாபயதாயினா।
உத்தமாங்கத்ருதம் காங்கம் வாரி கங்காதர: புன:॥
ஸம்யோஜ்ய தத்ர தீர்த்தே ச ஸர்வானாஹ கணேஶ்வராந்।

தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஸோமஸுந்தரக் கடவுள் மூலலிங்கத்திற்கு அக்னிதிக்கில் தமதுசூலத்தால் பூமியைக் குத்த அது ப்ரஹ்மாண்டத்தின் அடிப்பகுதிக்குச் சென்றது. ப்ரஹ்மாண்டத்தின் அடிப்பகுதியாகிய அங்கு இருந்த ஜலமானது அதிபாவனமாக பரிசுத்தமாக விளங்கியது. அது அடியிலிருந்து மிகுந்த சத்தத்துடன் ஆர்ப்பரித்து வெளியில் வெள்ளம்போல் வெளிப்பட்ட அத் தீர்த்தத்தினை அடக்கி தனது சிரஸிலிருக்கும் கங்கையை அதில் கலந்தருளினார் சிவபெருமான்.

சிவபெருமானாலேயே உண்டாக்கப்பட்டதால் 'சிவதீர்த்தம்' என்றும், உலகில் உள்ள தீர்த்தங்களுக்கெல்லாம் மேலானதாக விளங்குவதால் 'பரதீர்த்தம்' என்றும், தீர்த்தங்கள் அனைத்திற்கும் முதலானதால் 'ஆதிதீர்த்தம்' என்றும், பெருமைமிகுந்த தீர்த்தங்களுக்கெல்லாம் தலைமையாக விளங்குவதால் 'மஹா தீர்த்தம்' என்றும், தர்சனத்தின் மூலமாக பாபங்களைப் போக்கு வதால் 'பாபநாசனம்' என்றும், தொட்டு வணங்குவதாலேயே அச்வமேதயாக பலனைக் கொடுப்பதால் 'மஹாபுண்ய ப்ரததீர்த்தம்' என்றும், ஞானத்தைக் கொடுப்பதால் 'ஞானதீர்த்தம்' என்றும், மோக்ஷத்தைக் கொடுப்பதால் 'மோக்ஷதீர்த்தம்' என்றும், பெருமானின் தலையில் இருக்கும் கங்கை ஜலத்தோடு சேர்க்கப் பட்டதால் 'சிவகங்கா' என்றும், இந்த்ரனின் பொருட்டு இத்தீர்த்தத்தில் தங்கத்தாமரைகளை உண்டாக்கியதால் 'ஹேம பத்மாகரம்', 'ஸ்வர்ணபத்மினீ' என்றும் பல பெயர்களோடு விளங்குகின்றது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மூர்த்தியின் பெருமை

மேருமந்தரகைலாஸ காஶீ ஸ்ரீபர்வதாதிஷு।
ஶிவக்ஷேத்ரேஷு ஸர்வேஷு மஹாஸித்திப்ரதேஷு ச॥
ஸ்வாயம்புவாநி லிங்காநி ந பவந்தி யதா புரா।
ததாவிராஸீத் தல்லிங்கம் கதம்பவந மத்யகே॥
தஸ்மாதநேந ஸத்ருஶம் லிங்கமந்யத் புராதநம்।
ஶ்ருதி-ஸ்ம்ருதி-புராணேஷு நாஸ்தி நாஸ்தி முநீஶ்வரா:॥

மேரு, மந்தரம், கைலாஸம் முதலான சிவத்தலங்களில் தான்தோன்றி லிங்கங்கள் இல்லாதபோது பெருமான் கடம்ப வனத்தின் மத்தியில் தானே முளைத்த காரணத்தால் இம்மூர்த்திக்கு மும்மூர்த்தி = முன்மூர்த்தி உலகில் இருப்பதாக வேதாகமபுராண நூல்களில் குறிப்பே இல்லை. அதனால் தானோ என்னவோ சொக்கநாதப் பெருமானை 'முளைத்தானை எல்லார்க்கும் முன்னே தோன்றி' என்று பாடியிருக்கிறார் நாவுக்கரசர் பெருமான்.

உமயா நித்யஸம்பந்தாத் ஸுந்தரத்வாத் ஸ்வபாவத: ।
ஸோமஸுந்தர ஸம்ஜ்ஞாந்து புரா சக்ருர்திவௌகஸ:॥

இப்பெருமானுக்கு சக்தியை விட்டு எப்பொழுதும் பிரியாமல் இருப்பதாலும், அழகாக இருப்பதாலும் ஸோமஸுந்தரன் என்று பொருத்தமான பெயரிட்டுள்ளார்கள் தேவர்கள்.

லிங்காநாம் மூலபூதத்வாத் மூலலிங்கமிதி ஸ்ம்ருதம்।
ஸ்வாயம்புவம் து தல்லிங்கம் விஶ்வம் வ்யாப்ய வ்யவஸ்திதம்॥
தஸ்மாத் வேத்ரப்ரஹாரஸ்து ஸர்வத்ர பரித்ருஶ்யதே।
லிங்காநாம் வ்யஷ்டிபூதாநாம் ஸமஷ்டௌ ஸோமஸுந்தரே॥
ஸேவிதே ஶ்ரத்தயா ஸார்தம் ஸர்வசேஷத்ரகதாநி ச।
லிங்காநி ஸேவிதாநி ஸ்யு: நாத்ர கார்யா விசாரணா॥

லிங்கங்களுக்கெல்லாம் மூலமாக விளங்குவதால் மூலலிங்கம் என்று அழைக்கப்படுகின்ற ஸுந்தரேசப் பெருமானை தர்சனம் செய்வதால் உலகில் உள்ள எல்லா சிவலிங்கங்களையும் தர்சனம் செய்ததாக ஆகும் என்பதில் சந்தேகமே இல்லை. அவர்மீது பட்ட பிரம்படி அகில உலகங்களாலும் உணரப்பட்டதே அதற்கு சான்று.

வ்ருக்ஷஸ்ய மூலஸேகேந ஶாகா: புஷ்டிம் யதா யயு:।
மூலலிங்கே பூஜிதே து பூஜிதாந்யகிலாநி ச॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒருமரத்தின் வேரில் இடப்பட்ட நீர் எப்படி மரம் முழுமைக்கும் சென்று சேர்கிறதோ அதுபோல மூலலிங்கத்தை பூஜிப்பதால் உலகம் முழுவதும் பயனடைகிறது.

சதுஷ்ஷஷ்டிவிதா லீலா யேநாகாரி தயாளுனா।
தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஸ்யதி।।

ம்ருத்யுஞ்ஜயோபதேஸே ந பாரத்வாஜய்ய பக்ஷிண:।
ஸர்வேப்ய: பக்ஷிஜாதேப்ய:ஶ்ரேஷ்டத்வம் ய: ப்ரயச்சதி।।

தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஷ்யதி।
கோயஷ்டேரபி நிர்வாணப்ரதாநம் யேந காரிதம்।।

தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஷ்யதி।
மஹ்யஞ்ச த்ராவிடம் ஸூத்ரம் உபநிஷ்டம் ஸலக்ஷணம்।।

தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஷ்யதி।
பிஷ்டார்த முத்தமாங்கேந ம்ருத்பாரம் யோ ததார ச।।

தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஷ்யதி।
ஸ்ருகாலாநாமஸ்வரூபம் பரிகல்ப்ய ஸ்வமாயயா।।

விக்ரீணாதி ச தாநஸ்வாந் பாண்ட்யபூபாய யஶ்ஶிவ:।
தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஷ்யதி।।

ஶூதலேஸ்வாரோபிதா யேந க்ஷபணா வேதநிந்தகா:।
தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூதோ ந பவிஷ்யதி।।

யோ வராஹ ஶிஶூநாஞ்ச ஸ்தந்யந்தத்வா ஸூரக்ஷதி।
தேநைவ ஸத்ருஸோ தேவ: நபூநோ ந பவிஷ்யதி।।

கருங்குருவிக்கு மந்த்ர உபதேசம் செய்தவரும், நாரைக்கு முக்தி கொடுத்தவரும், எனக்கு (அகஸ்தியருக்கு) தமிழை உபதேசிப்பவரும், பிட்டுக்கு மண் சுமந்தவரும், நரியை பரியாக்கியவரும், சமணரை கழுவேற்றியவரும், பன்றிக்கு பால் கொடுத்தவரும், அறுபத்துநான்கு லீலைகளை இத்தலத்தில் நிகழ்த்தியவருமான ஸுந்தரேச்வர பெருமானுக்கு நிகரான தெய்வம் அவருக்கு முன்னும் இல்லை பின்னும் இல்லை.

யஜ்ஞாநாமஶ்வமேதஶ்ச பர்வதாநாம் ஹிமாலய:।
வ்ரதாநாம் ஸோமவாரஶ்ச மந்த்ராணாஞ்ச ஷடக்ஷரீ।।

தாநாநாமந்நதாநஞ்ச வர்ணாநாம் ப்ராஹ்மணோ யதா।
பாத்ராணாம் ஶிவபக்தாஶ்ச தர்மாணாம் ஶிவதர்மவத்।।

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவதாநாம் மஹாதேவோ வ்ருக்ஷாணாம் து ஸுரத்ரும:।
தேநூநாம் காமதேநுஶ்ச தீர்தாநாம் ஹேமபத்மிநீ॥
சிந்தாமணிஸ்து ரத்நாநாம் யதாமுக்ய: ப்ரகீர்தித:।
ததா ஸர்வேஷு லிங்கேஷு லிங்கம் ஸ்வாயம்புவம் மஹத்॥
ஸ்வாயம்புவேஷு லிங்கேஷு ஸோமஸுந்தரஸம்ஜ்ஞிதம்।
பூலோகஶிவலோகேஶம் ப்ரோக்தம் முக்யதமந்த்விதி॥

யாகங்களுள் அச்வமேதமும், மலைகளுள் இமயமும், வ்ரதங்களுள் ஸோமவார வ்ரதமும், மந்த்ரங்களுள் ஷடக்ஷர மந்த்ரமும், தானங்களுள் அன்னதானமும், வர்ணங்களுள் அந்தணரும், மனிதருள் சிவபக்தரும், தர்மங்களுள் சிவதர்மமும், தேவர்களுள் மஹாதேவரும், மரங்களுள் அரசமரமும், பசுக்களுள் காமதேனுவும்,தீர்த்தங்களுள் பொற்றாமரையும், ரத்னங்களுள் சிந்தாமணியும் போல, லிங்கங்களுள் ஸ்வாயம்புவம் சிறந்தது. ஸ்வாயம்புவ லிங்கங்களுள் ஸோமஸுந்தரலிங்கம் என்ற பெயரோடு விளங்குகின்ற லிங்கம் மிகச் சிறந்ததாகும்.

அநுக்ரஹாப லோகாநாம் நிஷ்கல: பரமஶ்ஶிவ:।
ஸ்ரீஹாலாஸ்யே லிங்கரூபீ ஸாந்நித்யம் குருதே ஸதா॥

உலகுக்கு நன்மை செய்யவே உருவமற்ற இறைவன் லிங்கரூபம் கொண்டு ஆலவாயில் எப்பொழுதும் எழுந்தருளி யிருக்கிறான்.

யேந த்ருஷ்டம் மஹாலிங்கம் பக்த்யா விமலயோ த்ருஶா।
ஸாக்ஷாத்காரேண கிரிஶோ த்ருஷ்ட ஏவந ஸம்ஶய:॥

யார் ஸுந்தரேச்வரப் பெருமானை தூய்மையான பக்தியோடு ஒருமுறை தரிசிக்கிறார்களோ அவர்கள் அம்பிகையோடு கூடிய சிவபெருமானையே நேரில் பார்க்கிறார்கள் என்பது நிச்சயம்.

மஹாவாதஹதா மேகாஶ்ஶைலா வஜ்ரஹதா யதா।
ததா நஶ்யந்தி பாபாநி ஹாலாஸ்யேஶ்வரதர்ஶநாத்॥

புயல் மேகத்தை விரட்டுவதைப் போலவும் உளி மலையைத் தகர்ப்பதைப் போலவும் இப்பெருமானைக் கண்ட பாபங்கள் அழிகின்றன.

ஹாலாஸ்யேஶம் மஹாலிங்கம் த்ருஷ்ட்வா ப்ராதஸ்ஸக்ருந்நர:।
சதுஸ்ஸமுத்ரபர்யந்த பூமிதாநபலம் லபேத்॥

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மத்யாந்ஹே து ஸக்ருத் த்ருஷ்ட்வா ஜீவந்முக்தி புரேஶ்வரம்।
ஸஹஸ்ரகபிலாதாந பலம் ப்ராப்நோதி மாநவ:।।
ஸாபங்காலே ஸக்ருத் த்ருஷ்ட்வா கதம்பவநநாயகம்।
கவாம் கோடி ப்ரதாநஸ்ய பலம் மர்த்யஸ்ஸமஶ்நுதே।।
அர்தயாமே ஸக்ருத் த்ருஷ்ட்வா சதுஷ்கூடபுரேஶ்வரம்।
அஶ்வமேதாதி யஜ்ஞாநாம் பலம் ப்ராப்நோதி பக்திமாந்।।

ஶ்ரீ ஸோமஸுந்தரக் கடவுளை காலையில் தர்ஶிப்பதால் நான்கு கடல்களுக்கு நிகரான பூமியை தானம் செய்த பலனும், பகலில் தர்சனம் செய்வதால் 1000 காராம்பசுக்களை தானம் செய்த பலனும், மாலையில் தர்சனம் செய்வதால் கோடி பசு தானம் செய்த பலனும், அர்த்தயாமத்தில் தர்சனம் செய்வதால் அச்வமேதம் முதலான யாகங்களைச் செய்த பலனும் ஏற்படுகின்றன.

ஆலவாயண்ணலை ஒருமுறை பக்தியோடு வணங்கி அஷ்டாங்க நமஸ்காரம் செய்பவன் மூவுலகினராலும் வணங்கத்தக்க நிலையை அடைவான்.

கடம்பவன நாயகனாகிய ஸோமஸுந்தரப் பெருமானுக்கு, ஹாலாஸ்யஸுந்தரம், கற்பூரஸுந்தரம், ம்ருகமதஸுந்தரம், ஸோமஸுந்தரம், ஸத்ஸுந்தரம், ஜனவதபீதஸுந்தரம், ஆதி ஸுந்தரம், ஆநந்தஸுந்தரம், தேவஸுந்தரம், சாம்பேயஸுந்தரம், பாண்ட்யஸுந்தரம், அட்டாலஸுந்தரம் என்று எண்ணற்ற பெயர்கள் வழங்குகின்றன.

கதம்பகாந்தாரஸமம் தபோவநம் ஹிரண்யபத்மாகரதுல்யதீர்தகம்।
ஸமஷ்டி வித்யாநகரீ மஹேஶிதுர்லிங்கேஸாம்யம் நஹி
லிங்கமந்யத்।।

கடம்பவனத்திற்கு இணையான வனமும், பொற்றாமரைக்கு இணையான தீர்த்தமும், ஸம்ஷ்டிவித்யாநகரின் தலைவனாக விளங்குகின்ற மூலலிங்கபெருமானுக்கு இணையான சிவலிங்கமும் இல்லை என்று மீண்டும் ஒருமுறை கூறி தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகியவற்றின் சிறப்பை நிறைவு செய்கிறார் அகஸ்த்ய மாமுனிவர்.

அஷ்டமீ ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்

மேற்கூறிய அறுபத்திநான்கினுள் அடங்காத ஒரு லீலை= திருவிளையாடல் ★மிகக்கொடியபாபி ஒருவனுக்கு ஸுந்தரேச்வரப் பெருமான் மோக்ஷம் அளித்ததாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவ்வாறு அவன் மோக்ஷம் பெற்ற தினம் மார்கழி மாதத்துத் தேய்பிறை அஷ்டமீ திதி என்ற காரணத்தால் அந்த வரலாற்றைக் கூறிகின்ற நூல் 'அஷ்டமீப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்' என்று வழங்குகிறது.

மக்கள் அனைவரும் துன்பங்களிலிருந்து விடுதலை பெற வழிசெய்ய வேண்டும் என்று அம்பிகை பெருமானை நோக்கி வேண்டியபொழுது, சிவபெருமானே கூறியதாக அமைந்துள்ளது இந்நூல்.

தன்னை மதிக்காத காரணத்தால் இமயமலை நாயகனாகிய இமவானை, 'நீயும் உன் மனைவியும் மனிதப் பிறவியை அடைவீர்கள்' என்று சாபம் அளிக்கிறார் துர்வாஸர். அவர்களது வேண்டுதலுக்கிரங்கி அச்சாபத்தை சற்று மாற்றி, 'சிவபக்தனும் உத்தமமானவனுமாகிய அரசச் சக்கரவர்த்தி ஒருவனுக்கு மகனாகப் பிறப்பாய். நீ ஆட்சிக்கு வந்த பிறகு அன்னை மீனாக்ஷியே உனக்கு மகளாகப் பிறப்பாள். ஸோமஸுந்தரப் பெருமானே உனக்கு மருமகனாக வந்து பாண்டிய மன்னனாகி அரசாட்சி புரிவார். உனக்கும் அருள்புரிவார்' என்று கூறி அருளுகிறார் துர்வாஸர்.

பிறகு அவ்விருவரும் கண்வமஹர்ஷியையும், அகஸ்த்ய முனிவரையும் தரிசனம் செய்து அருள் பெறுகிறார்கள்.

அப்பொழுது அகஸ்த்யரிடம் இமவான், 'எனது பிறவி எந்த இடத்தில் அமையும்' என்று கேட்க, அவர் 'உனது பிறவி பாண்டி நாட்டில் அமையும்' என்று சொல்லி, 'மதுரையின் பெருமை, ஆலயத்தில் செய்யப்படும் பூஜைகளின் சிறப்பு ஆகியவற்றைக் கூறி அங்கு குலசேகரபாண்டியன் என்ற சக்ரவர்த்தி, குழந்தை வரம் வேண்டி மீனாக்ஷி ஸுந்தரேச்வரரை வழிபட்டு வருகிறான்.

---

*ஒரு சமயம் அம்பிகை ஒரு பெட்டியுள் எறும்பு ஒன்றைப் பிடித்து வைத்து விட்டு, சிவபெருமானிடம், "நீங்கள் உலகம் முழுமைக்கும் படிஅளப்பவரா" என்று கேட்கிறார். பெருமான் "ஆம்" என்று கூற, உடனே, அம்பிகை, 'அப்படியானால் இந்த பெட்டியுள் இருக்கும் எறும்புக்கும் படிஅளந்தீர்களா?' என வினவுகிறார். அதற்கும் பெருமான் "ஆம்" என்று சொல்லி, அவ்வெறும்பிந் வாயைப் பார்க்கச் சொல்ல, அவ்வெறும்பின் வாயில் ஒருகுருணை அரிசி இருப்பதைக் கண்டு அம்பிகை வெட்க மடைந்து பெருமானிடம் மன்னிப்புக் கேட்பதா-கவும், அதனால் பெருமான் உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் படியளப்பவர் என்பதை உணர்த்தும் நாளே அஷ்டமீ ப்ரதக்ஷிணம் என்றும் ஒரு செவிவழி வரலாறு நிலவுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அவனுக்கு நீ மகனாகப் பிறப்பாயாக; உன் மனைவி சோழ மன்னனின் மகளாகப் பிறப்பாள். நீ அவளை மணந்து ராஜ்யத்தை பரிபாலனம் செய்' என்று கூறி அவர் த்யானத்தில் அமர்ந்தார்.

இமவான் குலசேகரப்பாண்டியனுக்கு மகனாகப் பிறந்து மலயத்வஜன் என்ற பெயரோடு ஆட்சி புரிதல், குழந்தை வரம் வேண்டி மலயத்வஜன் யாகம் செய்தல், மீனாக்ஷியே அக்னியில் குழந்தையாக தோன்றுதல், மீனாக்ஷி ஆட்சி புரிதல், ஸுந்தரேச பெருமானைத் திருமணம் செய்து கொள்ளுதல், ஸுந்தரேச்வரர் ஆட்சி புரிதல், பிறகு தங்களது குமாரனாகிய உக்ரகுமார பாண்டியனுக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்து கையிலையை அடைதல் போன்ற வரலாறுகளை கூறுகிறார்.

பிறகு, 'இத்தலத்தில் நடந்த வரலாறு ஒன்றைக் கூறுகிறேன்' என்று சொல்லித் தொடங்குகிறார்.

திருப்பரங்குன்றத்திற்குத் தென்கிழக்கில் உள்ள திருமங்கலத்தில் பண்டிதனும் தீயகுணமுள்ளவனுமாகிய அந்தணன் ஒருவன் வாழ்ந்தான். அவன் தீய நடத்தைகள் அதிகம் உடையவன் என்பதால் அவனை கடோரபாபி என்று அழைத்தனர் பெரியோர்.

அதே காலத்தில் அந்தணன் ஒருவன் கத்திரித்தோட்டம் அமைத்து அதன் காய்களை தினமும் கடோரபாபியைத் தவிர மற்ற அந்தணர்களுக்குக் கொடுத்து வந்தான். ஒரு நாள் அந்த அந்தணனை சிவாலயத்தில் தீயவார்த்தைகளால் பேசி காலால் எட்டி உதைத்தான் கடோரபாபி. வார்தாகபாலன் = கத்தரித்தோட்டக்காரன் அரசனிடம் முறையிட அரசன் அவையைக் கூட்டி விசாரித்தான்.

அப்பொழுது கடோரபாபியானவன், 'கத்திரிக்காயானது மாம்ஸத்திற்கு ஒப்பானது. அதனால் தள்ளத்தக்கது. அதை உண்பவனும் அவ்வாறே தள்ளத்தக்கவன். அவன் ஆலயத்தினுள் நுழைந்ததால் ஆலயம் அசுத்தமானது. எனவே, அதற்கு பரிஹாரம் செய்வதற்காகவே அவனை உதைத்தேன்' என்றான். அதைக்கண்டு வியந்தான் அரசன். அப்பொழுது அங்கு வந்த அகஸ்த்யரிடம் வார்தாகம் என்ற ⋆கத்தரிக்காயின் வரலாற்றைக் கூற வேண்டும் எனக் கேட்டான். ⋆(கத்தரிக்காய்க்கு வழுதுணங்காய் என்றும் பெயர்).

பஞ்சமேட்ரன் என்ற அஸுரனின் மைத்துனனின் பேரன் வார்தாகன் என்பவன். அவன் விபூதி ருத்ராக்ஷங்களோடு தினமும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முறையாக சிவபூஜை செய்பவன். ஒருநாள் அவன் பூஜை செய்யும் பொழுது அவன் எதிரில் தோன்றினார் மஹாவிஷ்ணு. அபிஷேகம் செய்து கொண்டிருந்ததால் மஹாவிஷ்ணுவின் வரவை கவனிக்காத வார்தாகனை என்னை கவனியாமல் மரம் போல் இருந்ததால், 'நீ கொடியமரமாக ஆவாய் என்றும் உனது காயானது சாப்பிடத் தகாததாக ஆகட்டும்' என்றும் சாபம் இட்டார்.

சாபத்தால் வருந்திய வார்தாகன் சிவபெருமானை வணங்கி வேண்ட, அதனால் மகிழ்ந்த சிவபெருமான், 'விஷ்ணுசாப பயம் உனக்கு வேண்டாம்; கவலைப்படாதே. விஷ்ணுவின் சாபத்தினால் நீ வ்ருக்ஷமாக ஆனாலும் உனது காயானது உண்ணத்தக்கதே. உனது காயினால் செய்யப்பட்ட உணவை நான் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறேன். விஷ்ணுவுக்கும் வைஷ்ணவர்களுக்கும் மட்டுமே நீ உண்ணத்தகாதவன். உனது காயில்லாமல் செய்யப்படும் சிவபூஜை விஷ்ணு பூஜைக்கு ஒப்பானது என்று அருளி மறைந்தார் சிவபெருமான்'' என்று கத்தரிக்காயின் வரலாற்றைக் கூறினார் அகஸ்த்யர்.

அதைக் கேட்ட அரசன் கடோரபாபியை சிறையிலிட்டான். வார்தாகபாலனை பொன் பொருள் கொடுத்து த்ருப்தி செய்தான். கடோரபாபியானவன் சிறையில் பசி தாகத்தால் மாண்டான். காலதூதர்கள் அவனை பாசக்கயிற்றால் கட்டி யமதர்மனிடம் அழைத்துச் சென்றனர். சித்ரகுப்தனால் விசாரிக்கப்பட்ட அவனை 'ஒரு கல்பகாலம் காலஸூத்ரம் முதலான நரகங்களில் அவனை சேர்ப்பாயாக' என்று உத்தரவிட்டான் யமதர்மன்.

சிலகாலம் நரகவேதனை அனுபவித்த அவன் ஆலவாயில் மரணமடைந்த காரணத்தால் மீண்டும் மதுரையின் தென்கிழக்கில் சிந்தாமணி நகரத்தில் இடையர் குலத்தில் பிறந்தான்.

முன்ஜன்மத் தொடர்ச்சியால் இப்பிறவியிலும் அவன் தீயவனாகவே வாழ்ந்தான். மஹாபாபியான அவனைக் கரையேற்ற வேண்டும் என்று விரும்பினார் ஸுந்தரேச்வர பெருமான். அம்பிகையைப் பார்த்து, 'கொடூரமானபாவியாகிய இவனுக்கு முக்தி கொடுத்தால் எனக்கு அழிவற்ற புகழ் உண்டாகும். அதற்கு நீயும் உதவ வேண்டும்' என்று கேட்டு பின்வருமாறு கூறினார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

★ ''அம்பிகையே! இடையவம்சத்தில் பிறந்திருக்கும் கடோரபாபியானவன் பசுக்களைக் காப்பாற்றுகிறான். நெல், உளுந்து, பயறு போன்ற தான்யங்களை உற்பத்தி செய்கிறான். ஒவ்வொரு ஆண்டும் பெருமுயற்சியோடு காடுகளை அழித்து விளைநிலங்களாக ஆக்குகிறான். எனவே அவனுக்கு முக்திதர வேண்டும். அதற்கு நீ பசுவடிவம் கொண்டு பயிர்களை உண்பதற்கு அவனது வயலுக்குச் செல். அவன் கோபத்தோடு உன்னை அடிக்க வருவான். நீ அவனிடமிருந்து தப்பிக்க முயற்சி செய்யும்போது அவன் உனது வாலைப் பிடித்துப் பின் தொடர்வான். நீ அவனை வரிசையாக வெளிவீதி தொடங்கி, மாசிவீதி, ஆவணிமூலவிதி, சித்திரைவீதி, ஆடிவீதி வழியாக அழைத்து வந்து கொடிமரத்தின் அருகில் விட்டுவிட்டு என்னிடம் வந்துவிடு'' என்றார்.

அம்பிகையும் அவ்வாறே செய்ய கொடிமரத்தருகில் வீழ்ந்த அவன் அழகியவிமானத்தில் ஏறி கயிலைக்குச் சென்றான். அப்பொழுது இடபவாஹனராகக் காட்சி கொடுத்த சிவபெருமான், ''உனது பாபங்கள் எல்லாம் எனதருளால் நீங்கின. நீ சுத்தனாக ஆனாய், இனி நீ கயிலாயத்தில் நிரந்தர வாசம் செய்வாயாக'' என்று அருளினார்.

''மேலும், உனது முக்தி தினமாகிய மார்கழிமாத க்ருஷ்ணபக்ஷ அஷ்டமீ தினத்தன்று யார்அதிகாலையில் எழுந்து பொற்றாமரையில் நீராடி, நித்யகர்மங்களைச் செய்து, வேதபாராயணம், 11 முறை ஸ்ரீருத்ரபாராயணம், சிவநாமஜபம் ஆகியவற்றோடு வெளிவீதி முதல் ஆடிவீதி மற்றும் உள்ப்ராகாரங்கள் இரண்டையும் வலம் வருகிறார்களோ, விநாயகர் முதல் அனைத்து மூர்த்திகளையும் முறையாக வழிபடுகிறார்களோ, அந்தணர்களுக்கு நெய், தேன், தயிர் ஆகியவற்றோடு கூடிய அன்னமிடுகிறார்களோ அவர்கள் மேலான சிவபதத்தை அடைவார்கள்.

★எனவே போக-மோக்ஷங்களை விரும்புபவர்கள் ஒவ்வொரு வருடமும் இதைச் செய்யவேண்டும். எந்த ஊரில் இருந்தாலும் இதைச் செய்யலாம். ஒரு ப்ராகாரம் உள்ள ஆலயத்தில் ஏழுமுறை ப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். சிவாலயம் இல்லாத ஊரில் வில்வமரத்தடியில் செய்யலாம்.

★ப்ரதக்ஷிணத்தை முடித்து எறும்புப்புற்றில் குருணை அரிசியை இட்டு எறும்புகளுக்கு உணவளிக்க வேண்டும். அதனால் லக்ஷம் அந்தணர்களுக்கு உணவளித்த புண்ணியம் உண்டாகும்.

